CASE NO. CC 421/2023

Date 04.08.2025

பெயர் PW 1 – நாகசுந்தரம் த/பெ வழிவிட்டான்

**(எதிரி ஆஜர்).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) எனக்கு சொந்தஊர் காளையார்கோவில் தாலுகா பொட்டக வயல் கிராமம் என்றால் சரிதான். நான் சிவகங்கையில் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் என்றால் 2000 ஆம் ஆண்டு முதல் குடியிருந்து வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.A., படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கூட்டுறவுத் துறையில் கேசியராக வேலைப் பார்த்து வருகிறேன். எதிரி என்னுடன் பணிபுரிபவரா என்றால் இல்லை. எதிரி என்னுடன் படித்தவரும் இல்லை என்றால் சரிதான்.

2) எனக்கும் எதிரிக்கும் தொழில் ரீதியான பழக்கம் உண்டா என்றால் இல்லை எதிரி அமுதா என்பவரது STD பூத்திற்கு வரும்போது பழக்கம். நான் சிவகங்கையின் தெற்குப் பகுதியில் உள்ள இந்திரா நகரில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரி சிவகங்கையின் வடக்குப் பகுதியில் உள்ள காஞ்சிரங்காலில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி நான் குடியிருக்கும் இடத்திற்கும் எதிரி குடியிருக்கும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கும்.

3) எங்கள் ஊரைச் சேர்ந்த சுப்பிரமணியம் மகன் மூர்த்தி என்பவரைத் தெரியுமா என்றால் தெரியும். மூர்த்தி எனக்கு என்ன உறவு முறை என்றால் பழக்கத்தில் மாமா என்று அழைப்பேன். மூர்த்தியும் நானும் ஒரே சமூகம் மற்றும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் மூர்த்தி மீது இந்த எதிரி ரூபாய் 40லட்சத்திற்கு காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் மேல்முறையீடு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.08.04 10:40:05 +0530

4) எதிரியும் மூர்த்தியும் சேர்ந்து ஒன்றாக சேர்ந்து தொழில் செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் கேள்விப்பட்டிருக்கிறேன். கடந்த 06.01.2019 ம் தேதி எதிரி என்னிடம் பணம் கேட்டாரா என்றால் முதல் நாளான 05.01.2019 ம் பணம் ரூபாய் 7 லட்சம் கேட்டார். எதிரி என்னிடம் ரூபாய் 7 லட்சம் 05.01.2019 ம் தேதி கேட்டதாக எனது புகார் வாக்குமூலத்திலோ நிரூபண வாக்குமூலத்திலோ மற்றும் வழக்ககிறஞர் அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) 06.01.2019 ம் தேதி எத்தனை மணிக்கு எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும்போது யாரெல்லாம் வீட்டில் இருந்தார்கள் என்றால் எனது மனைவி மட்டும் உடன் இருந்தார். எதிரியுடன் யார் யார் வந்து பணம் வாங்க வந்தார்கள் என்றால் எதிரி மட்டும் வந்தார். எதிரி எந்த வாகனத்தில் வந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எப்போது நான் எதிரியிடமிருந்து காசோலை வாங்கினேன் என்றால் 06.01.2019 ம் தேதியே 06.02.2019 ம் தேதியிட்டு காசோலை வாங்கினேன்.

6) என்ன கிழமை காசோலை வாங்கினேன் என்றால் ஞாபகமில்லை. எதிரி என்னிடம் கொடுத்த காசோலையை என் வீட்டில் வைத்து நிரப்பி கொடுத்தாரா என்றால் ஏற்கனவே நிரப்பி கவரில் வைத்துக் கொடுத்தார். எதிரி என்னிடம் கொடுத்த காசோலையை எங்கு வைத்து யார் நிரப்பிக் கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி காசோலையில் யார் கையொப்பம் போட்டார்கள் என்றால் தெரியாது.

7) நான் எதிரிக்கு ரூபாய் 7 லட்சம் எப்படி ஏற்பாடு செய்து கொடுத்தேன் என்றால் நகையை அடகு வைத்து கொடுத்தேன். நகையை எந்தெந்த வங்கிகளில் அடகு வைத்துக் கொடுத்தேன் என்றால் கனரா வங்கி, IDBI வங்கி, முத்தூட் பைனான்ஸ் ஆகியவற்றில் அடகு வைத்துக் கொடுத்தேன். நான் எந்தெந்த வங்கியில் எவ்வளவு நகை எவ்வளவு தொகைக்கு வைத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் எதிரிக்கு எந்தெந்த ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. நான் வருமான வரி தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. நான் கூட்டுறவுத்துறையில் மாத ஊதியத்திற்கு பணி செய்கிறேன் என்றால் சரிதான்.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.08.04 10:40:18 +0530

8) எதிரி என்னிடம் வட்டிக்கு பணம் வாங்கினாரா என்றால் இல்லை ஒரு மாதத்தில் திருப்பித் தந்துவிடுவதாக வாங்கினார். நான் எதிரிக்கு பணம் கொடுத்தது சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி எனக்கு வழங்கியதாக சொல்லக்கூடிய IDBI வங்கி காசோலை எண். 031498 என்றால் சரிதான். மேற்படி காசோலை 2013 ஆம் ஆண்டு காசோலை என்றால் சரிதான். அதே IDBI வங்கியில் தான் நான் கணக்கு வைத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வங்கி மூலம் எதிரி கொடுத்த காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9) 06.01.2019 ம் தேதி பணம் பெற்றுக்கொண்டு 06.02.2019 ம் தேதியிட்டு வழங்கப்பட்ட காசோலையை நான் 06.02.2019 ம் தேதியன்று வசூலுக்காக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் பேச்சுவார்த்தை மூலம் பணத்தை பெறலாம் என்று நினைத்ததால் வசூலுக்காக தாக்கல் செய்யவில்லை. 06.02.2019 ம் தேதியிட்ட காசோலையை 06.02.2019 ம் தேதிக்குள் பணத்தைக் கொடுத்துவிட்டு காசோலையை பெற்றுக் கொள்வதாக எதிரி கூறியதால் நான் வசூலுக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10) நான் யார் யார் மூலம் பணத்தை எதிரியிடமிருந்து வாங்குவதற்காக பேச்சுவார்த்தை நடத்தினேன் என்றால் தேவதாஸ் என்பவர் மூலம் பேசினேன் நடைபயிற்சி செல்லும்போது நாங்கள் இருவரும் பேசினோம். நான் தாக்கல் செய்த புகார்மனு நிரூபண வாக்குமூலத்தில் 06.01.2019 ம் தேதி எதிரி பணத்தைப் பெற்றுக்கொண்டு 06.02.2019 ம் தேதியிட்ட காசோலை மூலம் வங்கியில் பணத்தை பெற்றுக்கொள்ள கூறியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் 28.02.2019 ம் தேதி 22 நாள்கள் கழித்து காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

11) நான் 22 நாள்கள் கழித்து காலதாமதமாக காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்ததற்கான காரணத்தை புகார் மனு, நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 06.02.2019 ம் தேதி வழங்கப்பட்ட காசோலையை 28.02.2019 ம் வசூலுக்காக தாக்கல் செய்த இடைப்பட்ட காலத்தில் எதிரியிடம் தொடர்பு கொண்டு பேசினேனா என்றால் தொடர்பு கொண்டு பேசினேன்.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.08.04 10:40:35 +0530

நான் எங்கு வைத்து எப்போது பேசினேன் என்றால் நான் பல இடங்களில் பல முறை பேசியதால் எனக்கு சரியாக ஞாபகமில்லை.

12) மேற்படி விவரங்களை நான் தாக்கல் செய்த புகார் மனு நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்ட பின்னர் என்னை தொடர்பு கொண்டாரா என்றால் இல்லை. நான் குறிப்பிட்ட காலத்திற்குள் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன் என்றால் குறிப்பிட்ட காலத்திற்குள் வழக்கை தாக்கல் செய்துவிட்டேன். நான் குறிப்பிட்ட சட்ட காலத்திற்குள் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகார் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சட்ட காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யப்பட்டடதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

13) நான் எதிரிக்கு ரூபாய் 7 லட்சம் பணம் கொடுத்ததாக கூறப்படுவது சம்பந்தமாக என்னென்ன ஆவணங்கள் வாங்கினேன் என்றால் வழக்கின் வங்கி காசோலை மற்றும் இடப் பத்திரம் அசல் வாங்கினேன். புரோ நோட்டு, வேறு காசோலைகளோ வாங்கவில்லை என்றால் சரிதான். நான் எதிரி மீது ஆவணத்தின் அடிப்படையில் சிவில் வழக்கு தான் தாக்கல் செய்யவேண்டும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

14) என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்தும் என்னுடையதது தான் என்றால் சரிதான். நான் 10.10.2019 ம் தேதி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள புகார்மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் ஆவணப்பட்டியலில் 06.02.2019 ம் தேதி எதிரி புகார்தாரருக்கு வழங்கிய காசோலை என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி காசோலையை வசூலுக்காக வங்கியில் 28.02.2019 ம் தேதியிலேயே ரிட்டன் மெமோ வாங்கிவிட்டேன் என்றால் சரிதான்.

15) நான் 28.02.2019 ம் தேதி ரிட்டன் மெமோ வாங்கியுள்ள நிலையில் 8 மாதங்கள் கழித்து 10.10.2019 ம் தேதி தாமதமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். காலதாமதத்திற்காக மனு தாக்கல் செய்தேன் என்றால் அது பற்றி எனக்குத் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் 28 நாள்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. காலதாமதத்திற்கான

SELVAM P
Digitally signed by SELVAM P
Date: 2025.08.04 10:40:56 +0530

காரணங்களை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

16) எனது ஊரைச் சேர்ந்த எனது உறவினரான மூர்த்தி என்பவர் மீது எதிரி ரூபாய் 40 லட்சத்திற்கான காசோலை வழக்கு தாக்கல் செய்ததால் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு காலவதியான காசோலையை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி எனது உறவினரான மூர்த்தி JCB வாகனத்திற்கு கடன் பெறுவதற்கு ஆதரவாக பைனான்ஸ் கம்பெனிக்கு கொடுக்கப்பட்ட 2013 ம் ஆண்டு கொடுக்கப்பட்ட வங்கி காசோலையை வைத்து இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி எர்த் மூவர்ஸ் வைத்து நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

17) எதிரிக்கு சொந்தமாக சுமார் 60 மேற்பட்ட பொக்லைன் மற்றும் JCB வாகனங்கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எதிரி குவாரி எடுத்து நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எதிரி என்ன தொழில் செய்கிறார் என்ற விவரம் எனக்குத் தெரியாது ஆனால், தொழில் செய்வதற்காக என்னிடம் பணம் கேட்டார். எதிரி என்னிடம் பணம் வாங்குவதற்கு அவசியம் இல்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது என்னிடம் பணம் கேட்டார்.

18) எனக்கு மாத வருமானம் எவ்வளவு வரும் என்றால் ரூபாய் 25,000/- வரும் வேறு தொழில்கள் எனக்கு கிடையாது. நான் சிவகங்கையில் சொந்தமாக வீடு கட்டியுள்ளேன் என்றால் லோன் வாங்கி வீடு கட்டியுள்ளேன். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 குழந்தைகள். இருவரும் சாம்பவிகா தனியார் பள்ளியில் படிக்கிறார்கள் என்றால் சரிதான். எனது மனைவி வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். எனக்கு பூர்வீகச் சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.08.04 10:41:08 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,

சிவகங்கை.